
# காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

மலர் 1 இதழ் 37

25. 4. 65



காஞ்சி

மலர் 1 25—4—65 இதழ் 37

# மதுவிலக்கு, மக்களுக்கு! மது, மந்திரிகளுக்கு!!

மது குடிப்பதில்லை என்று ஆணையிட்டுக் கூறக் கூடிய நிலையில் உள்ள மராட்டிய மந்திரிகள் மிகக் குறைவு!—என்று மிகப் பக்குவமாக, குடிப்பழக்கத்தில் உள்ள மேல் மட்டத்தினர்களைப்பற்றி, புனா பல்கலைக் கழகத் துணைவேந்தர் என். வி. காட்கில் பேசியிருக்கிறார்.

அவருடைய பேச்சு, பக்குவமான முறையில் இருக்கிறதே தவிர, அந்தப் பேச்சின் மூலம் கேவல மான, மோசமான நிலைமை இருப்பது வெளியாகிவிட் டிருக்கிறது.

மராட்டியத்திலே அமைச்சர்களாக இருந்து அர சோச்சுபவர்கள் காங்கிரஸ் கட்சியினர் — அவர்களில் குடிப்பழக்கமில்லாதவர்கள் மிகக் குறைந்த எண்ணிக் கையினரே என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர், மதுவிலக்கு வாரவிழாவின்போது பேசியிருக்கிறார்.

காங்கிரசின் அடிப்படைத் திட்டங்களிலே ஒன்று மதுவிலக்கு; சமுதாய ஒழுக்கத்துக்காக அமைந் திருப்பது மதுவிலக்கு; மகாத்மாவின் இதயத்தில் பிடித்தமான இடம்பெற்றிருந்த திட்டம் அது.

அந்த மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி, மக்களைக் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கும் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண் டியவர்கள் காங்கிரஸ் அமைச்சர்கள். அவர்களில் பலர் குடிப்பழக்கமுள்ளவர்களாம்! எவ்வளவு வெட்கக் கேடான நிலைமை இது. இந்த அழகிலே அமைச்சர் பதவியில் உள்ள தமது கட்சித் தலைவர்கள் இருக்கிறார் கள் என்பதனை அறியும்போது உண்மையான காங் கிரஸ் தொண்டர்களின் மனம் என்ன பாடுபடும்?

குடிப்பழக்கத்தால் என்னென்ன விதமான நாசம் ஏற்பட்டுவிடுகிறது என்பதனை எடுத்து விளக்கி, மக் களுக்குக் குடிப்பழக்கத்தின்மீது ஒரு வெறுப்பு எழச் செய்து குடிப்பது கேவலம், இழிவு, என்ற எண்ணம் ஆழப் பதியும்படிச் செய்வதற்காக, மதுவிலக்கு வாரம் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த விழாவிலே எடுத்துக் கூறப்படும் அறிவுரை கேட்டு, தவறானபாதையிலே செல்பவர்களும் திருந்தி விடுவார்கள், என்று நம்புகிறார்கள். அந்த விழாவிலே காங்கிரஸ் அமைச்சர்களிலேயே பலர் குடிப்பழக்கம் உள்ளவர்கள் என்ற வேதனைதரும் தகவல் வெளியா கும்போது, சாதாரண நிலையிலுள்ள மக்கள் என்ன கருதிக்கொள்வார்கள். ஊருக்கெல்லாம் உபதேசம் செய்திடும் அமைச்சர்கள், உத்தமராம் காந்தியின் பெயர்கூறி உயர்ந்த பதவியைப் பிடித்துக்கொண்டவர் கள், குடியை விட்டுவிடவில்லையாமே! பெரிய இடத்தில் உள்ளவர்கள் குடிக்கலாம்போலிருக்கிறது! அவர் களுக்கு மதுவிலக்கு கிடையாதுபோலிருக்கிறது! மது விலக்கு என்ற பேச்சு உலகை மயக்கத்தான்போலிருக் கிறது என்றெல்லாம் எண்ணிக்கொள்ளமாட்டார் களா! அத்தகைய எண்ணம் பரவுவது, மதுவிலக்குத் திட்டத்தின் வெற்றிக்கா துணை செய்யும்?

குடிக்காதே! அது தீது! மிகக் கேவலம்! மகாத் மாவே சொல்லியிருக்கிறார்! காங்கிரஸ் அரசும் மது விலக்குத் திட்டம் போட்டிருக்கிறது! குடிப்பது கெடு தல்! சட்ட விரோதமுங்கூட!!—என்று பேசக் கேட்டி டும் குடிகாரர்கள் என்ன கூறுவார்கள், துடுக்குத்தன மான போக்கினராக இருப்பின்; "போய்யா போ! ஏட்டில் உள்ளதை எம்முன் நீட்டிக் காட்டுகிறாய்! மராட்டியத்திலே உள்ள காங்கிரஸ் அமைச்சர்களின் யோக்யதையைக் காட்கிலே வெட்ட வெளிச்சமாக்கி விட்டாரே, தெரியாதா! மதுவிலக்கு எங்களுக்கு! மது அந்த மந்திரிகளுக்கு!! என்பதுதான் திட்டமா!'' என்று கேட்டுக் கைகொட்டிச் சிரிப்பார்கள்!

மதுவிலக்கு, காங்கிரசின் அடிப்படைத் திட்டம். அதற்கு உலைவைக்கின்ற முறையிலே நடந்துகொள் வது மிக மிகக் கேவலம் என்பது மட்டுமல்ல, துரோகச் செயலுமாகும்.

மராட்டிய மாநிலக் காங்கிரஸ் அமைச்சர்களில் பலர் குடிப் பழக்கம் உள்ளவர்கள் என்று காட்கில் வெளிப்படையாகப் பேசிவிட்ட பிறகு, காங்கிரசின் தலைமை செய்யவேண்டியது என்ன? கட்சியின் பெய ரைக் காப்பாற்ற மட்டுமல்ல, சமூகத்தில் ஒழுக்கக்கேடு ஏற்படாமல் தடுத்திட வேண்டிய பொறுப்பை உணர்ந்து, காங்கிரஸ் மேற்கொண்டுள்ள மதுவிலக் குத் திட்டத்துக்குக் குழி பறித்துக் கேவலத்தை உண் டாக்கும் செயலில் ஈடுபட்டுள்ள காங்கிரஸ் அமைச்சர் களைக் கண்டுபிடித்து வெளியேற்ற வேண்டும். அவர் களைக் கண்டுபிடிப்பது கடினமுமல்ல, அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளவரும் வீண் பழி சுமத்துபவரு மல்ல, வெட்டிப் பேச்சுப் பேசுபவரும் அல்ல. அவரு டைய பேச்சை எதிர்க் கட்சியினரின் வீண் பழி என்று சொல்லியும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது; குற்றம் சாட்டியுள்ளவர் மதிப்பு மிக்க துறையிலே தலைமை ஏற்றிருக்கும் தகுதியாளர். காங்கிரசின் தலைமை, பொறுப்புடனும் துணிவுடனும் இந்தச் செய லைச் செய்திட முன்வரவேண்டும்; இல்லையெனில், எத்த கைய இழிசெயலினரையும் துணைகொண்டு ஆதிக்கத் தைக் காப்பாற்றிக்கொள்ளும் கேவலப் போக்குடன் நடந்துகொள்வதாகவே பொருள்படும்.

இவ்வளவு பரந்த பூபாகத்தில் எங்கோ ஓரிடத்தில், யாரோ சில காங்கிரஸ் அமைச்சர்கள் குடிப்பழக்கத்திலிருக்கிறார்கள் என்பதைக் காரணம் காட்டி, எல்லாமே கெட்டுவிட்டது என்று வாதாடலாமா என்று கேட்பார் உளர்.

மராட்டியத்தோடு நின்றுவிட்டிருப்பதாகத் தெரியவில்லை, இந்தக் கேவலம். புதுடில்லியில், மதுவிலக்கு வார விழாவில் பேசிய மொரார்ஜிதேசாயும்,

> சில காங்கிரஸ் அமைச்சர்கள் குடிப்பழக்கத்தின் கோரப்பிடியிலே சிக்கிக்கொண்டுள்ளனர். இந்த நிலை நீடிக்குமானால் கட்சி மட்டுமல்ல, நாடே நாசமாகிவிடும்.

என்று பேசி இருக்கிறார்.

ஆகவே இது யாரோ வேண்டுமென்றே இட்டுக் கட்டியது அல்ல என்பதும் புரிகிறது, மேல்மட்டத் தலைவர்கள் இதனை அறிந்துள்ளனர் என்பதும் தெரிகிறது.

இவ்வளவு வெட்ட வெளிச்சமாகிவிட்ட பிறகும், அத்தகைய ஒழுக்கக்கேடர்களைக் காங்கிரசிலிருந்து அப்புறப்படுத்திவிடும் துணிவு, ஏன் காங்கிரஸ் தலைமைக்கு வரவில்லை?

# அவர்கள் போக்கு!

முனியா! காப்பியிலே என்னடா சத்து இருக்கு! நாங்கள்தான் அதைக் கட்டிக்கொண்டு அழுகிறோம். நீ சாப்பிடும் சோளக் கஞ்சியிலே உள்ள சத்து, காப்பியிலே ஏது, கொக்கோவில் ஏது? — என்று பேசுகிறார், அரைமணி நேரத்துக்கு முன்னதாகக் காப்பி சாப்பிட்டு முடித்த அய்யம்பெருமாள், சோளக்கஞ்சி சாப்பிட்டபோது ஏற்பட்ட குமட்டலைப் போக்க வெற்றிலை பாக்குக்குக் காசு வாங்கவந்த முனியன், காப்பி சாப்பிடும் அய்யம் பெருமாள் சோளக்கஞ்சியின் பெருமை பற்றிப் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்றான். வேறு என்ன செய்வான்! மறுக்க முடியுமா? அவரோ ஆண்டை! இவனோ அடிமை?

மொழிப்பித்து கூடாது—இந்தியாவை ஒரு தேசீய அமைப்பாகக் கருதிப் பிரச்சினைகளைப் பார்க்க வேண்டுமேயன்றி, என்மொழி, என்மொழி பேசுவோர் பிரதேசம் என்றெல்லாம் நினைப்பதும் பேசுவதும், சச்சரவிடுவதும் மிகமிகத் தவறு என்று, தமது மொழியின் பாதுகாப்புக்காகவும் வளர்ச்சிக்காகவும் வாதாடத் துணிபவர்களிடம் பெரிய தலைவர்கள் பேசுகிறார்கள்—காங்கிரஸ் தலைவர்கள்.

மற்றவர்களுக்குச் சோளக் கஞ்சியின் பெருமையை எடுத்துக்கூறிடும் கனவான்கள், தங்களுடன் தொடர்புகொண்ட பிரச்சினை எழும்போது என்ன பேசுகிறார்கள்?

கோவா யாருக்கு என்பது இப்போது, கோபம் கக்கிடும் பிரச்சினையாகிவிட்டிருக்கிறது.

கோவா மராட்டியத்துக்குத்தான்-இதனை மறுப்பார் யார்-எவர் மறுத்தாலும் நாங்கள் விடுவோமா! கோவா மக்களில் பெரும்பாலோர் பேசுவது, மராத்தி மொழி. மொழிவழி பார்க்கும்போது கோவா, மராட்டிய மாநிலத்தில்தானே இணையவேண்டும். இதைக்கூடவா நான் விளக்கிக்கொண்டிருக்கவேண்டும்!" என்று வருத்தப் படுகிறார் மராட்டியத் தலைவர், சாவன்.

அவர் இப்போது பார்த்து வரும் வேலையோ, இந்தியப் பேரரசில்—பாதுகாப்பு மந்திரியாக.

அவரிடம் நாடு எதிர்பார்ப்பது சீனாவிடம் சிக்கி விட்ட இந்தியப் பகுதியை மீட்டுத் தருவார் என்பது.

அவர் இப்போது மும்முரமாக அக்கறை காட்டி வருவதோ, கோவாவை மராட்டியத்தில் இணைப்பது பற்றி!

அவரையே அழைத்து ஒரு நாள் பேசச் சொல்லுங்கள் மொழிப் பிரச்சினை பற்றி! அறிவாற்றல் காட்டிப் பேசுவார், மொழிப் பித்து கூடாது, அது இந்திய ஒற்றுமையையே அழித்துவிடும் என்று. ஆனால் அவர் எந்தக் காரணம் காட்டி கோவாவை மராட்டியத்துடன் இணைக்கச் சொல்கிறார். அங்கு உள்ளவர்கள் பெரும் பாலோர் மராட்டிய மொழியினர் என்ற காரணம் காட்டி. மொழிப் பித்து என்றால் கோபம் வரும்!

அவருக்கு இளைத்தவர் என்று என்னை எண்ணி விடாதீர்கள் என்பதுபோலக் கிளம்புகிறார் மைசூர் மாநில முதல்வர் நிஜலிங்கப்பா—கோவா மைசூருக்குத் தான்; இது சின்னப்பிள்ளைகளுக்குக் கூடத் தெரியுமே; அத்தனை பெரிய தலைவருக்கு ஏன் இது புரியவில்லை என்ற கருத்துப்படப் பேசுகிறார். அவர் கூறும் காரணம்? கோவாவில் பேசப்படும் கொங்கணி மொழிக்கும் மைசூருக்கும் நீண்ட காலத் தொடர்பு இருக்கிறது; இயற்கை அமைப்பின்படி பார்த்தாலும், வரலாற்று ஆதாரத்தின்படி பார்த்தாலும், கோவா மைசூருக்குத் தான் வரவேண்டும்; அதனைப் பெற்றாலன்றி கன்னட மாநிலம் அமைதி பெறாது என்கிறார்.

இதற்கு ஆதாரங்களைத் தேடிட, மொழி நிபுணர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள் நிரம்பப் பேர் முன் வந்து விட்டனர்.

மைசூரை முன்பு ஆண்டுவந்த கதம்பர் எனும் வம்சாவளியினர் கோவாவையும் சேர்த்து ஆண்டு வந்தனர் என்று கூறிடவும், கோவா மராட்டியத்துடன் இணைந்தால் கொங்கணி மொழியின் தனித்தன்மை கெட்டுவிடும், கொங்கணி மொழி தனித்து இயங்கி வளமாக இருக்கவேண்டுமானால் கோவா, மைசூரில் தான் இணையவேண்டும் என்றும் பலமான வாதம், தேசீயத் தலைவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. தமிழர்களின் மொழி ஆர்வத்தைப் பற்றிக் கேட்டுப் பாருங்கள் அவர்களை—மொழிப் பித்து கூடாது என்று தான் முழக்கம் எழுப்புகிறார்கள். ஆனால் தத்தமது மொழியையே ஆதாரமாகக் காட்டி, பிரதேசங்களைப் பெறத் துடிக்கிறார்கள்.

அவர்களைத் தள்ளுங்கள்; நமக்கெல்லாம் புத்தி சொல்கிறாரே காமராஜர், அவரை அகில இந்தியத் தலைவர் என்ற முறையில், மராட்டியருக்கும் கன்னடியருக்கும், இவ்விதமான மொழிப்பித்து இருக்கக் கூடாது; கோவா யாருக்கு என்று மொழியின் பேரால் சச்சரவு இடக்கூடாது என்று புத்தி கூறச்சொல்லுங்கள். செய்யமாட்டார். செய்தால், இரு மாநிலத்திலும் எதிர்ப்பு எழும், கருப்புக்கொடி பறக்கும், கிளர்ச்சி நடக்கும்.

அய்யம்பெருமாள் முனியனுக்குத்தான் சொல்லுவார் சோளக் கஞ்சியின் பெருமையை;

அவருக்குத் தேவை, பழக்கம், காப்பிதான்!

# ?! வினா-விடை

(1) பல மொழிகளை ஆட்சி மொழிகளாக்குவது சிக்கல் உள்ளதாமே?

சிக்கல் இருக்கும்; அதற்குக் காரணம் என்ன? அடிப்படைக் காரணம், தனித் தனித் தாய் மொழிகளைக் கொண்ட அரசுகளை ஒரு பேரரசில் இணைத்திருக்கும் முறைதான்! அந்த முறை இவ்விதமான சிக்கலை ஏற்படுத்தத்தான் செய்யும். ஆனால் சிக்கல் ஏற்படுமே என்ற அச்சத்தாலே அலுத்துப் போய், ஒரு மொழி மற்ற மொழியினர்மீது ஆதிக்கம் செலுத்தும் விதமான ஆட்சி மொழித் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியுமா? இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படுவது அத்தகைய கொடுமையைத்தானே மூட்டிவிடும். அதனால்தான், எந்த மொழியினரும் மற்ற மொழியினரை ஆதிக்கம் செலுத்த முடியாத விதத்தில் பல மொழிகள் ஆட்சி மொழிகளாக்கப்படும் திட்டத்தை வலியுறுத்துகிறோம். இதிலே சிக்கல் ஏற்பட்டால் அதனை நீக்கிக்கொள்ள என்ன வழி என்று ஆராயவேண்டும். பல மொழிகளை ஆட்சி மொழிகளாகக் கொண்ட நாடுகளில் இந்தச் சிக்கல் எப்படி நீக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்து, நிபுணர்களைக் கலந்து, சிக்கலைப் போக்க வேண்டும்.

(2) வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் பேசக் கூடியவர்கள் யார்?

எவருக்கும் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லாதவர்கள்! எவரையும் தம்மோடு அழைத்துச் செல்லும் எண்ணம் கொள்ளாதவர்கள்! பாதுஷாவும் பேசலாம்! பக்கிரியும் பேசலாம்! முன்னவர் பேசுவதற்கு மறுப்பு எழாது—அச்சம் காரணமாக! மற்றவர் பேசுவதற்கும் எதிர்ப்பு எழாது—காரணம் ஒருவரும் கவனிக்க மாட்டார்கள்—பொருட்படுத்த மாட்டார்கள்.

(3) எதிர்க்கட்சிகள், ஒன்றுக்கொன்று ஒட்டிவர முடியாதபடி வெவ்வேறான கொள்கைகள் வைத்துக்கொண்டுள்ளன என்று காங்கிரசார் கேலிபேசுகிறார்களே அது பற்றி என்ன சொல்லுகிறீர்?

அப்படிக் கேலி பேசிப் பேசி தூண்டிவிட்டு, எதிர்க் கட்சிகள் தமது தனித் தனிக் கொள்கைகளை விட்டுவிடவோ, மாற்றிக் கொள்ளவோ செய்துவிடலாம் என்று காங்கிரஸ் தலைவர்கள் நினைக்கிறார்கள். அப்படி நேரிட்டு விட்டால், உடனே, பார்! பார்! கொள்கையை விட்டுவிட்டார்கள்! உறுதிப்பாடு இருந்தால், நம்பிக்கை இருந்தால் கொள்கையை விட்டு விடுவார்களா என்று பிறகு தாக்குவார்கள்! அந்த வாய்ப்பைப் பெறுவதற்காகவே இப்போது இவ்விதமாகக் கேலி பேசுகிறார்கள்.

(4) விஜயலட்சுமி அம்மையார் தமக்குப் பதவி ஆசை இல்லை என்றும், ஆனால் நல்ல தகுதி உள்ளவர்களைப் பதவியில் அமர்த்திவைக்கத் தம்மாலான உதவி செய்ய விரும்புவதாகவும் கூறுகிறாரே, இதன் பொருள் என்ன?

வெளிப்படையாகவே தெரிகிறதே. இப்போது ஆட்சியில் உள்ளவர்களை நல்ல தகுதி உள்ளவர்கள் என்று அம்மையார் ஒத்துக்கொள்ளவில்லை என்பது ஒன்று. நல்ல தகுதி உள்ளவர்கள் வேறு இருக்கிறார்கள் என்பது மற்றொன்று. அவர்களை ஆட்சியில் அமர்த்திவைக்கும் வல்லமை தமக்கு உண்டு என்று அறிவிப்பது இன்னொன்று. அம்மையாரின் பேச்சிலே லால்பகதூருக்கு எச்சரிக்கையும், மொரார்ஜி தேசாய்க்கு அன்பழைப்பும் கலந்திருப்பதாக விவரமறிந்த வட்டாரம் கருதுகிறது.

(5) தருமபுரியில் தோற்றுவிட்டீர்களே, என்ன செய்யப்போகிறீர்கள்?

திருவண்ணாமலையில் தோற்றுவிட்ட பிறகு காங்கிரஸ் கட்சி என்ன செய்ததோ, அதையே தான் தொடர்ந்து பணியாற்றி வலிவினை வளர்த்துக்கொண்டு வெற்றிக்கு வழி காணும் வேலை.

(6) தமிழ்நாட்டிலே மூன்று மாதம் தங்கியிருக்கப்போகிறேன்—எல்லா மக்களையும் சந்திக்கப் போகிறேன் என்று காமராஜர் சொல்லியிருக்கிறாரே, அதன் பொருள் என்ன?

பக்தவத்சலம் குழுவினரிடம் அவருக்கு உள்ள அலட்சியத்தைக் காட்டியிருக்கிறார் என்பதுதான் பொருள். மக்களைச் சந்தித்து, விளக்கம் அளித்து, காங்கிரசுக்கு வலுவு அளிக்க, பக்தவத்சலம் குழுவினரால் இயலவில்லை, அதற்கான திறமை இல்லை; அந்தத் திறமை தமக்கு மட்டுமே உண்டு! என்பதைக் கூறுகிறார். இதைவிட எரிச்சல் தரும் குட்டு வேறு இருக்க முடியாது பக்தவத்சலம் குழுவினருக்கு. ஆனால் குட்டும் கை, மோதிரக் கை! முத்திரை மோதிரம்! ஆகவே இனிக்கிறது, குட்டுப்பட்டவர்களுக்கு.

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

# இதயம் வென்றிட (1)

இரத்த ஆறு ஓடும்-பிணமலை குவியும்-வீடுகள் தீக்கிரையாகும்-வயல்கள் கருகும்-எங்கும் அல்லோலகல்லோலம்-அமளி-அழிவு.

காட்டுத் தீபோல, கட்டுக்கு அடங்காத பெருவெள்ளம்போல, நெருப்பைக் கக்கும் எரிமலையின் குமுறல்போல; செங்கிஸ்கான், தைமூர், அட்டில்லா போன்ற வெறிபிடித்தலைந்தவர்கள் அவனியில் நடமாடி அழிவை ஏவியபோது, நிலைமை இருந்தது.

அவர்களின் படைகள் பாய்ந்து வருகின்றன என்றால் ஒரே பீதி! எதிர்த்து நிற்க முடிவதில்லை; தடுத்திட முடிவதில்லை! அழிவு! அழிவு! பெரும் அழிவு! எதிர்ப்பட்டதெல்லாம் அழிக்கப்படும்! வாள்! வேல்! ஈட்டி! இவை மட்டுமல்ல, நெருப்பு, விஷம், சித்திரவதைக் கருவிகள் இவைகளையும் கொண்டுதான் அந்த வெறியர் போர் நடத்தினர்.

போர்முறை, அதிலே ஒரு நெறி; ஆயுதமற்றவர்களைத் தாக்காதிருக்கும் பண்பு; பெண்டிரிடமும் குழந்தைகளிடமும் பச்சாதாபம் காட்டும் உணர்வு; சொத்துக்களை நாசமாக்காதிருக்கும் முறை எனும் எதற்கும் அவர்கள் கட்டுப்படுவதில்லை. எதையும் நாசம் செய்வது; வதைப்பது; வாட்டி எடுப்பது; அதிலே மக்கள் துடிதுடிப்பது கண்டு மகிழ்வது, இப்படி அவர்கள்.

அவர்களின் வெறித்தனத்தை இன்று கண்டிக்கிறோம்; வரலாற்றுச் சுவடிகள் அவர்களை நடமாடிய நாசம் என்று குறிக்கின்றன. ஆனால் அவர்கள் படைபலமும் போர் வெறியும் காட்டி நாடு நகரங்களை அழித்தும், மக்களைக் கொன்று குவித்தும் நாசத்தை மூட்டிவிட்டபோது அவர்களின் செயலைக் கண்டிக்க முடியவில்லை. கண்டிப்பவனின் நாக்கு துண்டாடப்பட்டுவிடும்!


அவர்களைக் கண்டிக்காதது மட்டுமல்ல, அவர்கள் பெற்ற வெற்றிகளைக் கொண்டாட விழாக்கள்! கோலாகல பவனிகள் நடைபெற்றன!

ஒருபுறத்தில் அக்கொடியவர்கள் வெட்டி வீழ்த்திய உடலங்கள் குவியல் குவியலாக; மற்றோர்புறத்திலே அந்த மாபாவிகளின் கொலு!

அது மட்டுமல்ல! அந்த அக்ரமக்காரர்களின் வெறித்தனத்தை வீரம் என்றும், படுகொலைகளை வெற்றிகளென்றும் கூறிட வேண்டிய கொடுமைக்கும் சிலர் ஆளாக்கப்பட்டனர். கவிதைகளை இயற்றித்தந்தனர் சிலர்! அவர்களின் கொடுஞ்செயல்களைக் காவியமாக்கித் தந்தனராம் சிலர்! அதற்காகவே சிலர், அந்த வெறியர்களால் அமர்த்தப்பட்டிருந்தனராம்.

அவர்களின் 'காலம்' முடிந்த பிறகே, அவர்களின் செயல் எத்துணைக் கொடுமை நிரம்பியது என்பதனைக் கூறிட முடிந்தது. அவர்களின் ஆதிக்கம் இருந்துவந்தபோது, புகழாரம் சூட்டிடவும் வேண்டி நேரிட்டது, புண்பட்ட நெஞ்சினரால்! தமது புலமையை அந்தக் கொடியவர்களுக்குப் பலி கொடுத்திட வேண்டியும் நேரிட்டதாம்!

கொடுமைகளை எதிர்த்து ஒழித்திட முடியாத நிலையில் பலர் அதற்கு இரையாகிவிடுவதுடன், சிலர் அந்தக் கொடுமையைக் கொடுமை என்று கூறிடவும் முடியாத நிலையினராகிக் குமுறிக்கிடந்திடுவதுண்டு.



வெற்றிவெறி தலைக்கேறிய அந்தத் தருக்கர்களும், தம்மை எதிர்த்து நிற்பார் இல்லை என்பதைக் களம் பலவற்றில் கண்டு கண்டு இறுமாந்து, தமக்கு இந்த ஆற்றலை ஆண்டவன் அளித்திருப்பது, அதனைக் கொண்டு இந்த அவனியை அஞ்சிட வைத்திடவும், அடக்கி ஆண்டிடவுமே என்றுகூடக் கருதினர்.

ஆண்டவனே அனுப்பிவைத்த அழிவாயுதம் என்று தமக்குத் தாமே விருதும் சூட்டிக்கொண்டனர் அந்தக் கொடியவர்கள்,

இப்போதுதான் எடுத்துக் காட்டப்படுகிறது; அவர்களிடம் இருந்துவந்த படைகளின் தன்மையும், அவர்கள் கையாண்ட போர்முறையும், அவர்கள் காட்டிய வேகமும் துணிவுமே அவர்களைக்கண்டோர் மருண்டிடத்தக்க, கேட்டோர் கிலிகொள்ளத்தக்க வெற்றிகளைப் பெற்றிடச் செய்தது என்பதனை.

நெடுங்காலத்துக்குப் பிறகுதான், எவ்வளவோ நாசத்துக்குப் பிறகுதான், அவ்விதமான அழிவுச் சக்தியை எப்படித் தடுத்து நிறுத்துவது, எப்படி எதிர்த்து ஒழிப்பது என்ற போர் முறையை வகுத்திடவும், வெற்றி காணவும் முடிந்தது. அந்தக் கட்டம் பிறந்திடும் வரையில் அந்தக் கொடியவர்கள், எவராலும் தோற்கடிக்கப்பட முடியாத மாவீரர்கள் என்று கூறிக்கொள்ள முடிந்தது.

உலகை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டானல்லவா இட்லர்! சென்ற இடமெங்கும் வெற்றி என்றனர்! சேதி சொல்லி அனுப்பினால்போதும், சரண் அடைய நாடுகள் காத்திருந்தனவே.

அவனை வெல்வார் இல்லை! என்று உலகே பேசிற்று. எதுவரையில்? அவனை வீழ்த்துவதற்கான முறை செம்மைப்படுத்தப்படும் வரையில்.

கொன்று குவித்திடும் கொடுமை நிரம்பிய களம் நின்றவர்களின் இறுதியே, தோல்வி என்றாகிவிட்டது என்கிறபோது, ஆயிரத்தெட்டு தந்திரங்களின் துணை கொண்டு, அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றுவிடும் ஒரு கட்சி, என்றென்றும் வல்லமைமிக்கது, வீழ்த்தப்பட முடியாதது என்ற நிலையில் இருந்துவிடும் என்று பேதையும் கூறிடான். கொடுமைகளைத் தாங்கித் தத்தளித்த உலகு இறுதியில் அந்தக் கொடுமையினை ஒழித்துக் கட்டியது என்பதனைக் காட்டிடுவது வரலாற்றுச்சுவடி. இதனை மறந்து தேர்தல் களத்திலே பெற்றுவிட்ட ஒரு வெற்றியைக் கண்டு, காங்கிரசின் தலைவர்கள் எமக்கு இனி எவரே இணை! எவர் இனி எம்மை என்ன செய்திட முடியும்! என்றெல்லாம் இறுமாந்து பேசுகின்றனர்.

அது கேட்டு நமது தோழர்கள் கோபித்து ஆகப்போவது ஒன்றுமில்லை.

வெற்றிபெற்ற காங்கிரசுக் கட்சி பேசுவதில், ஆணவம் நெளிகிறது; உண்மை; ஆனால் அந்தப் பேச்சைக் கேட்டுக்கொள்வது, கழகத்துக்கு நன்மையே செய்திடும், என்று நான் நம்புகிறேன் எனவே வெற்றிவெறியிலே அவர்கள் பேசுவதை வரவேற்கிறேன்.

தோல்வியால் துயரமும், வெற்றி வெறியாளரின் பேச்சால் கோபம் கலந்த வேதனையும் கழகத் தோழர்களிடம் மூண்டிட மூண்டிட, அவர்கள் தமது முறைகளைச் செம்மைப்படுத்திக்கொள்ள முனைவர் என்பது என் எண்ணம். நான் கடிந்துரைப்பதன் மூலம் நடைபெறக்கூடியதைக் காங்கிரசின் வெற்றி வெறிப் பேச்சினர், நடத்திக் கொடுக்கிறார்கள் கடிந்துரைத்திடும் இயல்பும் எனக்கு இல்லை.

தேர்தல் களத்திலே ஏற்பட்டுவிடும் ஒரு தோல்வி நம்மைச் செயலற்றவர்களாக்கிவிடாது என்பதனை நான் அறிவேன், நானே தேர்தலிலே தோற்கடிக்கப் பட்டவன்.

தோல்வி, துடைக்க முடியாத இழுக்கை ஏற்படுத்திவிடும் என்று கவலைகொள்பவனுமல்ல; வெற்றி, அதனைப் பெற்றவர்களுக்கு என்றென்றும் ஒளிவீசும் புகழாரம் சூட்டிவிடாது என்பதனையும் அறிந்திருக்கிறேன்.

போட்ட புள்ளிகள் பொய்த்துப்போவதும், தீட்டிய முறைகள் கெட்டுப்போவதும், எதிர்பார்த்தவைகள் நடைபெறாமல் போய்விடுவதும், நாம் இதற்கு முன்பு காணாததுமல்ல; ஒவ்வொரு தனிமனிதருக்கும்சரி; கட்சியும் சரி, இத்தகைய நிலையினைக் கண்டதுண்டு; அறிவோம்.

மோப்பம் பிடிப்பதிலும், பதுங்கிப் பாய்வதிலும், பாய்ந்து பற்றுவதிலும், பற்றுவதைப் பிய்த்து எறிவதிலும் காட்டிலே புலிக்கு உள்ள திறமை, நாட்டிலே தேர்தல் களத்திலே காமராஜருக்கு உண்டு என்று பேசாதார் இல்லை, புகழாதார் இல்லை.

எனினும் திருவண்ணாமலையிலும் திருச்செங்கோட்டிலும், மாநகராட்சி மன்றத் தேர்தலிலும், கேரளத்திலும், காமராஜரின் கணக்கு சரியில்லை, வாக்கு பலிக்கவில்லை, முயற்சி வெற்றி பெறவில்லை; அதனால் அவருடைய மூக்கு அறுபடவில்லை, முகாம் கலைக்கப் படவில்லை, முடுக்குகூடக் குறையவில்லை!

ஐயாயிரம் ஓட்டுகள் அதிகம் பெற்று வெற்றிக் கொடி நாட்டுவோம் என்று பிரகடனம் செய்தவர்தான் காமராஜர் திருவண்ணாமலைத் தேர்தலின்போது!!

மாநகராட்சி மன்றத் தேர்தலை முடித்துக்கொண்டு டில்லி புறப்பட்ட காமராஜர், ஹைதராபாத்திலே, நிருபர்களிடம், தொலைந்தது கழகம்! வென்றது காங்கிரஸ்! கார்ப்பரேஷனைக் காங்கிரஸ் கைப்பற்றிவிட்டது! என்று அறிவித்தார்.

நினைத்தது நடக்கவில்லை; நடந்துவிட்டது கண்டு அவருடைய நினைப்பு தளரவில்லை, நிலை தடுமாறவில்லை; பேச்சிலேகூட ஒரு அச்சம், ஆயாசம் எழவில்லை,

அதனை நான் எடுத்துக்காட்டுவது அவரைக்கேலி செய்ய அல்ல.

வெற்றியை எதிர்பார்த்து, அதற்காகப் பாடுபட்டு, நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்பி, தோல்வியைக் கண்டால், எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கான கருத்தினைக் கழகத் தோழர்கள் பெறவேண்டும் என்பதற்காகவே இதனைக் கூறினேன்.

சிலகாலமாக நமக்கு ஓர் எண்ணம் வளர்ந்துவிட்டிருக்கிறது; நம்முடைய முயற்சி எப்படியும் வெற்றி பெற்றுவிடும் என்ற எண்ணம்.

காரணமற்றதுமல்ல அந்த நம்பிக்கை.

நாம் மேற்கொள்ளும் முயற்சி நியாயமானது என்பதால், அந்த முயற்சி வெல்லும் என்று கருதுவதும்,

நாம் மேற்கொள்ளும் முயற்சிக்கு மக்களின் பேராதரவு இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் நிரம்பத் தெரிவதால், வெற்றி கிடைத்திடும் என்று கருதுவதும் தவறு அல்ல.

ஆனால், நம்முடைய முயற்சி நியாயமானது என்பதை எடுத்து விளக்கும் செயலிலும்,

நம்முடைய முயற்சிக்குப் பேராதரவு அளித்திடும் விருப்பம் கொண்டுள்ள மக்கள் முழுத் திறமையுடன் நமக்குத் துணைநின்றிடச் செய்திடும் செயலிலும், நாம் பெறவேண்டிய வெற்றியைப் பெற்றோமில்லை.

மற்றொன்று, நாம் காங்கிரசுக்கு உள்ள 'தேர்தல் யந்திரத்தின்' அளவு, தாங்கும் சக்தி, தாக்கும் சக்தி இவைபற்றிய கணக்கிலேயும் தவறு செய்கிறோம்.

காங்கிரஸ், தனது தூய காந்தீயக் கொள்கையை இழந்துவிட்டது; ஆகவே அதற்குக் காந்தியார் காலத்தில் இருந்துவந்த மதிப்பு இப்போது மங்கி விட்டது.

ஆகவே, காங்கிரசின் செல்வாக்கு சிதைந்து விட்டது என்பது நமது கருத்து.

இந்தக் கருத்தினைக்கொண்டோர், வேறு பலரும் உளர். இந்தக் கருத்து தவறானதுமல்ல; உண்மை; மறுக்கமுடியாதது.

கொள்கைக் கூடமாகக் காங்கிரஸ் இல்லை, கொள்கையாளர் அதிகம்பேர் அங்கு இல்லை என்பது உண்மை. அதனால் மதிப்பு மங்கிவிட்டது என்பது உண்மை; ஆனால் ஒரு விசித்திரமான உண்மை என்ன வென்றால், தம்பி! கொள்கையை இழந்துவிட்டபிறகு காங்கிரசுக்குத் தூய்மையான அமைப்பு என்ற செல்வாக்கு இல்லை என்றாலும், தேர்தலில் ஈடுபட்டு வெற்றி ஈட்டத்தக்க கட்சி என்ற வலிவு வளர்ந்திருக்கிறது.

கொள்கையை இழந்துவிட்டது காங்கிரஸ், எனவே அதனுடைய வீழ்ச்சி நிச்சயம் என்பது பொதுவான உண்மை என்றபோதிலும், கொள்கைச் சிறப்புடன் காங்கிரஸ் இருந்துவந்தபோது, அதனுடன் நெருங்கமுடியாத நிலையினில் இருந்துவந்த பலர், கொள்கையைக் காங்கிரஸ் இழந்துவிட்டபிறகு, அச்சமற்று அதிலே சேர்ந்துகொள்ள முன்வந்தனர்.

அவர்கள், ஓட்டு வேட்டையாடும் வலிவினைக் காங்கிரசுக்குப் புதிதாகச் சேர்த்துக்கொடுத்துள்ளனர்.

மகாத்மாவின் காலத்தில் அதன் தூய்மை காரணமாகக் காங்கிரசிடம் மக்கள் 'பக்தி' செலுத்தினர் காங்கிரசின் வலிவு மிகுந்திருந்தது.

காங்கிரசின் கொள்கை புதையுண்டபிறகு, அதிலே புகுந்துகொண்ட புதியவர்கள், இலாப நோக்கத்துடன், திட்டமிட்டு, காங்கிரசுக்கு வலிவு ஊட்டியுள்ளனர்.

காந்தியார் காலத்துக் காங்கிரஸ், மக்களின் இதயத்தை வென்றிடும் வலிவுகொண்டிருந்தது.

கொள்கையை இழந்துவிட்ட காரணத்தால் காங்கிரசுக்கு, முன்பு இருந்த வலிவு இல்லை என்று நாம் கூறும்போது, தம்பி! மக்களின் இதயத்தை வென்றிடும் வலிவு இல்லை என்பதைத்தான் எண்ணிச் சொல்கிறோம்.

கொள்கை இழந்த பிறகு காங்கிரசைத் தமது கூடாரமாக்கிக்கொண்டவர்கள், மக்களின் இதயத்தை வென்றிடும் வல்லமையைக் காங்கிரஸ் பெறும்படி செய்யவில்லை; அவர்களால் முடியாது; ஆனால் அவர்கள் மக்களின் 'ஓட்டுகளை'த் தட்டிப் பறித்திடும் வலிவினைக் காங்கிரசுக்குத் தேடிக்கொடுத்துள்ளனர்.

பத்தினி கெட்டால் பளபளப்பு அதிகமாகும், துவக்கத்தில்! இறுதியில் இழிவு நாசம்! ஆனால் இடையிலே ஒரு புது மினுமினுப்பு, குலுக்கு, தளுக்கு, ஏற்படும்.


பாவையின் பயணம் ரூ. 1—50

அரசாண்ட ஆண்டி ரூ. 1—50

அண்ணாவின் கருத்தோவியம்

மதுரைக்கு டிக்கட் இல்லை ரூ. 2—00

கிடைக்குமிடம்! பரிமளம் பதிப்பகம், சின்ன காஞ்சிபுரம்.

காங்கிரசைத் தமது கூடாரமாக்கிக்கொண்டவர்கள் அதனுடைய பழைய புனிதத்தன்மையை மாய்த்துவிட்டனர்; ஆனால் ஒரு புதிய பளபளப்பைத் தந்துள்ளனர்.

அந்தப் பளபளப்பு விவரமறியாதாரை மயக்க வல்லது என்பதனை மறந்துவிடக்கூடாது.

தனிப்பட்ட முறையில் தாக்கும் நோக்குடன் அல்ல, நிலைமையை விளக்குவதற்காகக் கூறுகிறேன்; காங்கிரஸ் தூய அமைப்பாக இருந்தபோது, பழைய கோட்டைப் பட்டக்காரரும், சங்கரண்டாம் பாளையத்தாரும், பூண்டி வாண்டையாரும், மூப்பனாரும் மற்றவர்களும், அதிலே இல்லை. அது, சிறை செல்ல, சொத்து இழந்திட, தடியடிபட, துப்பாக்கிக்குண்டடி ஏற்க அழைத்த காங்கிரஸ்.

எங்குச் செல்கிறோம் என்றும் தெரியாது, என்னென்ன இடர்ப்பாடுகள் என்பதும் புரியாது, எத்தனை நீண்ட பயணம் என்ற கணக்கும் அறியாது என்ன கிடைக்கும் என்று நினைக்கவும் முடியாது, ஒரு தூய தொண்டாற்றுகிறோம், இதயம் கூறுகிறது, அதன்படி நடக்கிறோம் என்று மட்டுமே உணர்ந்து பலர் காங்கிரசில் ஈடுபட்ட காலத்தைக் குறிப்பிடுகிறேன்.

அப்போது, வ. உ. சிதம்பரனாரும், திருப்பூர் குமரனும், சர்தார் வேதரத்தினமும் தேவைப்பட்டனர்; கிடைத்தனர்.

அவர்கள் காலத்துத் தூய்மை மங்கிற்று; மடிந்தது; காங்கிரஸ் ஒரு கட்சியாக வடிவமெடுத்தது; அரசியல் ஆதாயம் தர்த்தக்க அமைப்பு ஆயிற்று; வாண்டையாரும் பட்டக்காரரும் நெடும்பலத்தாரும் சேதுபதியாரும் காங்கிரசிலே சேர முடிந்தது.

அவர்கள் சேர்ந்ததால் மக்களின் இதயத்தை வெல்லும் சக்தியைக் காங்கிரஸ் இழந்தது; ஆனால் மக்களிடம் உள்ள 'ஓட்டுகளை' மயக்கியோ மிரட்டியோ பெற்றிடும் வலிவினை அந்த வித்தையில் மெத்தத் தேர்ந்தவர்களான அவர்கள் காங்கிரசுக்குக் கொடுத்துள்ளனர்.

இந்தக் கணக்கினை நாம் கவனிக்காமலிருப்பது தவறு; மிகமிகத் தவறு.

பழயகோட்டை பட்டக்காரரால், உப்புக்காய்ச்ச முடியவில்லை, சட்டம் மீறமுடியவில்லை, கைராட்டை சுற்றமுடியவில்லை, வரிகொடா இயக்கம் நடத்த முடியவில்லை; ஆனால் அவரால் இன்று, தம்மைப் பெரிய புள்ளி என்றும், பட்டக்காரர் என்றும், விளக்கிக்கொள்வதன் மூலம் ஏற்படும் செல்வாக்கைப் பயன்படுத்தி ஓட்டுகளைப் பெற்றுத்தந்திட முடிகிறது.

இத்தகையவர்கள் நிரம்ப உளர், இன்றையக் காங்கிரசில்; அதன் காணமாக, இதயத்தைப் பெறமுடியாத நிலையைப் பெற்ற காங்கிரசினால், ஏழையின் ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக்கொள்ளும் புதிய வலிவினைப் பெறமுடிந்திருக்கிறது.

இதயத்தை வென்றிடும் வல்லமையைக் காங்கிரஸ் இழந்துவிட்டது என்பது மட்டுமல்ல, மக்களின் இதயத்தை வென்றிடும் தன்மை கழகத்திடம் வளர்ந்து கொண்டு வருகிறது.

மக்களின் இதயத்தை வென்றிடும் வல்லமையையோ காங்கிரஸ் இழந்துவிட்டது; மக்களின் இதயத்தை வென்றிடும் நிலையோ கழகத்துக்கு இருக்கிறது, இந்நிலையில் காங்கிரசால் கழகத்தைத் தோற்கடிக்க முடியுமா என்ற எண்ணம் நமக்கு.

இந்த வாதத்தில் தவறு இல்லை; பொருள்இல்லாமற் போகவில்லை. தவறு எங்கே இருக்கிறது என்றால், தேர்தல் களம் என்பது, முழுக்க முழுக்க இதயத்தை வென்றிடும் இடம் என்று நினைத்துக்கொள்வதுதான்.

✽

"சரியல்ல என்று தெரிகிறது என்றாலும் செய்யவேண்டி இருக்கிறதே"

"நான் என்ன செய்ய! என் நிலைமை அவ்விதம் ஆகிவிட்டது"

"விருப்பத்தோடா நான் ஆதரவு கொடுத்தேன்!"

இவ்விதமான பேச்சை தேர்தல் சமயத்திலே கேள்விப்படலாம்.

✽

"அந்தக் கட்சிக்காக அல்ல, நிற்கிறாரே அவர் எனக்கு மிகவும் வேண்டியவர்."

"நிற்கிற ஆள் எனக்குத் தெரியாது, ஆனால் கம்பெனி முதலாளி அவர் பக்கம்; நான் வேறு பக்கம் இருக்க முடியுமா?"

"என்ன செய்வது, கடன் கொடுத்தவன், கழுத்தின் மீது கத்தியை நீட்டுகிறான்; இந்தத் தேர்தலில் அவன் பக்கம் நான் இருந்தால்தான், தலை தப்பமுடியும்",

"என்னமோ என் கஷ்டம் போக ஏதாவது வழி கிடைக்காதா என்று பார்க்கிறேன். கொள்கை கோட்பாடு என்று பேசிக் கொண்டிருந்தால், என் குடும்பத்தைக் கவனிக்க வேண்டுமே! பெரிய மனிதர் வாக்குக்கொடுத்திருக்கிறார், உதவி செய்வதாக. அதனால் தான் அந்தப்பக்கம் இருக்கிறேன்."

"நம்ம சம்பந்திக்கு வேண்டியவராம். நான் அவர் பேச்சைத்தட்டி நடக்க முடியுமா?"

"என் மானம் சொத்து எல்லாம் இந்த வழக்கிலே நான் வெற்றி பெறுவதைப் பொருத்து இருக்கிறது. இதற்கு முக்கியமான சாட்சி ஒருவர். அவர் வந்து சொல்கிறார்

இன்னாருக்குத்தான் ஓட்டுப்போட வேண்டும்
என்று. எப்படி நான் மீற முடியும்.''

இவ்விதம் பேசுபவர்களையும், தம்பி! தேர்தலின்போது காணலாம்.

✽

தேர்தலின் போது அனைவருமே இதயத்தின் கட்டளைப்படி நடந்து கொள்வார்கள் என்று எண்ணி விட முடியாது. கட்டளை, கனிவுரை, எச்சரிக்கை, வரம், வாக்குறுதி, மிரட்டல், எனும் பல்வேறு வகையின கிளம்பும், பல்வேறு முனைகளிலிருந்து.

✽

"பார்ப்போமே, பயல் என்னை மீறி நடக்கிருனு என்பதை''

"கண்டிப்பாகச் சொல்லி விடு! இதிலே என் சொல்லை மீறி அவன் நடந்தால்; பிறகு எவ்விதமான பந்தமும் பாசமும் எனக்குக் கிடையாது என்பதை.''

"என்ன ஏகப்பட்ட ஆட்டம் போடுகிருனுமே! கேட்டு விட்டுவா, சொத்தை ஏலத்துக்குக் கொண்டு வரவா என்பதை.''

என்று இவ்விதமாக மிரட்டித்திரியும் பேர்களைக் காணலாம் தேர்தல் காலத்தில்.

✽

மற்றச் சமயத்தில் இதயம் பேசும்-தேர்தல் சமயத்தில் இதயம் தூங்கிவிடும் அளவுக்கு மயக்க மூட்டும் காரியம் நடைபெறும். அதைச் செய்திட வல்லவர்கள் இருக்கிருர்கள்.

மக்களின் இதயம் நமது பக்கம், ஆகவே தேர்தலில் வெற்றி நமது பக்கந்தான் என்று எண்ணுவது இயற்கை; வாதம் நியாயமானது. ஆனல் தேர்தல் நேரத்தில் நீதியைக்கூடச் சாய்த்துவிடத்தக்க வல்லவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிவிடுவார்கள்.

கட்சியின் சிறப்பு, கொள்கையின் தூய்மை, வேட்பாளரின் திறமை என்பவைகளைக் காட்டி ஆதரவு திரட்டுவது மேடைகளில். நம்முடைய முறை.

வீட்டுக்குள்ளே உட்கார்ந்து முன்பின் தொடர்பு பற்றிப் பேசி, இன்னருக்கு இன்னர் வேண்டியவர், இதைச் செய்தால் இது கிடைக்கும் என்பதுபற்றி விளக்கி,

எனக்காக இதைச் செய்யவேண்டும், இதைச் செய்தால் இன்ன பயன் உண்டு, இதைச் செய்யச்சொல்லி 'இவர்' சொல்லி அனுப்பியிருக்கிருர்.

எப்படியும் என்பேச்சை நீங்கள் தட்டி நடக்கமாட்டீர்கள் என்று கூறிவிட்டு வந்திருக்கிறேன். என் மதிப்பு உங்கள் கையிலேதான் இருக்கிறது.

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவன், மறந்துவிடாதீர்! இந்த உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன்

என்று இச்சகம் பேசியும் நச்சரித்தும், ஏற்கனவே கொண்டுள்ள நினைப்பை மாற்றிக்கொள்ளச் செய்வதிலே தனித்திறமை பெற்றவர்கள், தேர்தல் சமயத்திலே சுறுசுறுப்படைகிருர்கள்.

✽

யார் வெற்றி பெற்றுல் எங்களுக்கு என்ன? எந்தக் கட்சியினுல் எங்களுக்கு என்ன? எங்களுக்கு வேண்டியது மூவாயிரம். கோயில் கோபுரம்கட்டி முடித்தாகவேண்டும். அந்தத் தொகை கொடுப்பவருக்கு இந்தக் கிராமத்து ஓட்டு முழுவதும்

என்று பேரம் பேசிடும் பெரியவர்களைப் பார்க்கலாம் தேர்தல் காலத்தில்.

✽

இப்பத்தானய்யா, நம்ம கிராமத்துக்கு நல்ல காலம் பிறக்கப்போவுது. ஏரி மதகு புதிதாக வேணும் என்று இந்தப் பத்து வருஷமாக முயற்சி செய்கிருேம் அல்லவா! நேற்றுதான் அதற்கு வழி பிறந்தது. தாசீல்தார் ஒத்துக்கொண்டு விட்டார். நாளைக்கு வருகிருர்கள் அளவு எடுக்க! நம்ம கஷ்டம் தீர்ந்தது.

பரவாயில்லயே, புதுதாசீல்தார் நல்லவர் போலிருக்கிறது. நம்ம நியாயம் அவருக்குப் புரிந்திருக்குது.

புரியும்படிச்செய்தாரு கதம்பத்தூராரு...

கதம்பத்தூராருக்கு நம்ம ஏரிமதகுபற்றி என்ன அக்கறை?

அவருக்கு எதுக்காக அக்கறை ஏற்படும்? நான் ஏற்படுத்திவைத்தேன் அந்த அக்கறையை.

அது எப்படி? உன்னேடு பேச்சுக்கு அவர் கட்டுப்படுவானேன்?

அவரோட பேச்சுக்கு நாம கட்டுப்படுவதாக ஒப்புக்கொண்டதாலேதான்......



GIRIJA'S Coffee
கிரிஜா காப்பித்தூள்
குணம், மணம், ருசி, இவற்றில் சிறந்தது
100 சுயம்
கிடைக்குமிடம்: போன்: 75833
கிரிஜா காபி ஒர்க்ஸ்,
காபி வெண்ணெய், நெய் வியாபாரம்,
5/76 ராயப்பேட்டை ஹைரோடு
மைலாப்பூர், சென்னை-4.


அது என்ன ஏற்பாடு? விளங்கச் சொல்லேன்?

நம்ம கிராமத்து ஓட்டு அவ்வளவும், அவர் கட்சிக்கு நாம போடணும்; ஒத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

இவ்விதமாகக்கிராமத்துப்பெரியதனக்காரர்ஊர்கூட்டிப் பேசிவிடுவதும் உண்டு; பல இடங்களில்.

❋

"உன்னுடை கட்சி கொள்கை கொடி எல்லாத்தையும் நீ அடுத்த தடவைக்குப் பார்த்துக்கொள்ளு. இந்தத் தடவை நான் சொல்றபடி செய்துவிடு! காரணம் இருக்குது"

என்றுபேசி, தன் மகனை மடக்கிப் போட்டுவிடும் தகப்பனுரைக் காணலாம் தேர்தல் நேரத்தில்.

❋

தர்மபுரித் தேர்தலின்போது ஒரு கிராமம்—நமக்கு ஆதரவான இடம்—அங்கு ஒரு இளைஞர், கழகத்தவர்—நமக்காகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றிக்கொண்டிருந் தார். ஒருநாள், சேலம் மாவட்டத்துக் காங்கிரஸ் தலைவர்களிலே ஒருவர் அவரைச் சந்தித்தார்; கூட்டுறவுத் துறையிலே அவர் பெரியவர்; கழக இளைஞர் கூட்டுறவுத் துறையில் தொடர்புள்ளவர். அந்தத் தொடர்பையே காரணமாகக் காட்டி, அந்தக் காங்கிரஸ் தலைவர், கழக இளைஞரைத் தன் பக்கம் இழுக்கும் தந்திரத்தில் ஈடுபட்டார்.

"என்னப்பா! நாம இருவரும், கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்கள். நமக்குள்ளே எந்த விதத்திலும் சச்சரவு, பேதம் வரக் கூடாது. கூடிப்பழகி வருபவர்கள்."

"கூடிப் பழகுவதற்கும் கட்சிக்காக ஓட்டுக் கேட்பதற்கும் என்னங்க சம்பந்தம்? நான் என் கட்சிக்கு வேலை செய்வதும், நீங்க உங்க கட்சிக்கு வேலை செய்வதும், நம்ம இருவருடைய சினேகிதத்தையும் எப்படிங்க பாதிக்கும்."

"நாம இரண்டுபேரும், வேறு வேறு கட்சி அல்ல. இருவரும் ஒரே கட்சி, கூட்டுறவுக் கட்சி; தெரிகிறதா!"

"கூட்டுறவு ஒரு கட்சியாகுங்களா! எந்தக் கட்சிக்காரரும் அதிலே இருக்கலாமே..."

"இருக்கலாம்; ஒப்புக்கொள்கிறேன்; ஆனு நாம இருவரும் தேர்தலிலே வேறு வேறு கட்சிக்கு வேலை செய்தா எப்படியும் நமக்குள்ளே பகை உண்டாகிவிடும். அது நம்ம கூட்டுறவுத் தொடர்பையே கெடுத்து விடுமே..."

"எனக்கு என்று ஒரு கட்சி இருக்குதுங்களே."

"கழகம்! தெரியும்! இப்ப நடக்கப்போற தேர்தலிலே கழகமே ஜெயித்தாலும், சர்க்காரா மாறப்போகுது? பொதுத் தேர்தலின் போது எந்தக்கட்சி மெஜாரடியாக வருதோ அது சர்க்காரை அமைக்கும். பொதுத் தேர்தலின்போது நீ உன்னுடைய கழகத்துக்கு வேலை செய்து, வெற்றி தேடிக் கொடுத்து, சர்க்கார் அமைத்துக்கொள். நான் தடுக்கவில்லே; வேண்டாமென்று சொல்லவில்லே, இப்ப நடப்பது இடைத் தேர்தல். இதிலே, எனக்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுத்தா, என்ன கெட்டுவிடும், யோசனை செய்துபாரு! இந்தத் தேர்தலில் என் கட்சி ஜெயித்தால் எனக்கு மதிப்பு—எனக்கு மதிப்பு என்ருல், நாம நம்முடைய கூட்டுறவுத் துறையை நம்ம மாவட்டத்திலே மேலும் வளரச்செய்ய முடியும். எவ்வளவோ செய்ய வேண்டி இருக்குது. செய்ய வேண்டு மானுல் என் வார்த்தைக்கு மதிப்பு உயர வேண்டும். அது உயர, என்னவழி? இந்தத் தேர்தலிலே நான் வெற்றிபெற்றுக் காட்ட வேண்டும். அதனுலேதான் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன், இந்தமுறை கட்சிக்காகப் பிடிவாதம் பிடிக்காதே."

"எப்படிங்க முடியும். நாலுபேர் என்ன சொல்லுவாங்க."

"சரி, நீ காங்கிரசுக்கும் வேலை செய்யாதே, கழகத்துக்கும் வேலை செய்யாதே. ஒதுங்கி இருந்துவிடு."

இவ்விதம் மேடையில் பேசமுடியுமா! பேசவேண்டிய இடத்தில் பேசினுர் அந்தக் காங்கிரஸ் தலைவர்; கழக இளைஞரும் ஒதுங்கிக்கொண்டதாகக் கேள்வி.

❋

இதயத்தை வேலைசெய்யவிடாமல் தடுத்திடும் முறைகள், புதிது புதிதாகக் கிடைத்திடும் வேளை, தேர்தல்காலம்.

மக்களின் இதயம் நம்மிடம் என்ற எண்ணத்தை மட்டுமே நாம்கொண்டிருந்தால் போதாது; அதனைக் கெடுத்திடத்தக்கன தேர்தல் நேரத்தில் என்னென்ன கிளம்பக்கூடும் என்பதனைக் கண்டறியவும், தடுத்திடவும், அவைகளைமீறி, வெற்றி கிடைத்திடவுமான முறையில் பணியாற்றவேண்டும்.

❋

காங்கிரஸ், ஆளுங்கட்சியாகிவிட்ட பிறகு, ஆதாயம் தேடுவோர், தாமாக அதிலே நுழைந்துகொள்ளவும், நட்பு தேடவும் முற்பட்டுவிட்டனர்.

காங்கிரஸ் ஆட்சி நடத்தினுல் மட்டுமே, தமது நிலைமை பாதுகாக்கப்படும் என்று உணர்ந்த செல்வவான்கள், தேர்தலின்போது, காங்கிரசின் பக்கம் திரண்டு நிற்கிருர்கள்.

மகாத்மாவின் காங்கிரஸ் தனது தூய்மையைக் காட்டி மக்களின் இதயத்தை வென்றது என்ருல், ஆளுங்கட்சியாகிவிட்ட காங்கிரஸ், தன்னிடம் உள்ள சலுகைதரும் சக்தியைக்காட்டி ஆசை ஊட்டவும்

## சிறை நினைவுகள்

கைதி எண் என்ற தலைப்பிட்டு எழுதிக் கொண்டு வந்த சிறை நினைவுகள் தோழர் அன்பழகன் விடுதலையான நாள்வரை உள்ள பகுதியுடன் முடித்துக்கொண்டிருக்கிறேன். அதற்குப் பிறகு உள்ள பகுதியை இணைத்து சிறை நினைவுகள் புத்தகவடிவில் வெளியிட ஏற்பாடாகி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

**அண்ணுதுரை.**

கெடுத்துவிடும் வலிவைக்காட்டி மிரட்சியை மூட்டிவிடவும் செய்கிறது.

காந்தியாரின் காங்கிரசைக் கண்ட பொதுமக்களின் கண்களில் நீர் துளிர்த்தது—பக்தியால், பாசத்தால்.

இன்றையக் காங்கிரசைக் காணும் பொதுமக்களின் கண்களில், மிரட்சி தெரிகிறது, எதிர்த்தால் என்ன கெடுதல் வந்துவிடுமோ என்ற எண்ணத்தால். இந்த நிலையை மீறி, இதயம் பேசவேண்டும்; எளிதானது அல்ல!!

தம்பி! நான் குறிப்பிட்டுக் காட்டினேனே, பட்டக்காரர், வாண்டையார், நெடும்பலத்தார் என்றெல்லாம்; அவர்களின் 'ரகம்' ஒவ்வொரு வட்டத்திலும் உண்டு. அவர்களில் பெரும்பாலோர், முன்பு காங்கிரசை எதிர்த்து நின்றவர்கள், தங்கள் நிலைமைகளை, சொத்து சுகத்தை, அதிகாரம் அந்தஸ்த்துகளைக் காப்பாற்றிக் கொள்ள அதனாலே மிகுந்த கஷ்ட நஷ்டத்துக்கு ஆளானவர்கள்.

அவர்களைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது, தன் தூய்மையை இழந்ததால்.

காங்கிரசில் தங்களுக்கு இடம் கிடைத்ததும் அதனை எதிர்த்து எதிர்த்து எரிச்சலும் ஏமாற்றமும் கொண்டவர்கள், இது பொன்னான சந்தர்ப்பம் என்று கண்டுகொண்டனர்; எதைஎதை, காங்கிரசை எதிர்த்த போது பெறமுடியாமல் தவித்தார்களோ, அதனையும் அதனைவிட மேலானவற்றையும் காங்கிரசில் இருந்து கொண்டு அவர்களாலே பெறமுடிகிறது என்றால், அவர்களுக்குக் காங்கிரஸ் கசக்குமா! அந்தக் காங்கிரசை வலிவுபடுத்துவதும் அவர்களுக்கு நஷ்டமா!!

காமராஜர் நல்லவர், பச்சைத் தமிழர் ஆகவே நான் காங்கிரசை ஆதரிக்கிறேன் என்று பெரியார் சொன்னாலும், அவர் காங்கிரசை ஆதரிப்பதற்கான உண்மையான காரணம் எனக்குத்தெரியும்!! எனக்குத் தெரியும் என்பது அவருக்கும் தெரியும்!!!

யாராருக்காகப் பெரியார், வாதாடி, அவர்களின் நிலைமைகளைக் காப்பாற்றக் காங்கிரசுடன் போராடிப் போராடிவந்தாரோ, அவர்களில் பெரும்பாலானவர்கள் காங்கிரசிலே சேர்ந்து எல்லா வாய்ப்புகளையும் பெற்று, நிம்மதியாக, நிலை உயர்ந்து இருக்கக் காண்கிறார். அவர்களுக்கு இந்த இடம் கொடுத்திருப்பதால், காங்கிரசை ஆதரிக்கிறார். வேறு காரணம் யாவும், திறமையான வாதம்! வேறில்லை;

ஒரு உதாரணம் பாரேன்! தஞ்சைத் தரணியில் நெடும்பலம் சாமியப்பாவின் நிலை காப்பாற்றப்பட, அவரை எதிர்த்துவந்த காங்கிரசைப் பெரியார் மிகப் பலமாகத் தாக்கிவந்தார். இப்போது நெடும்பலத்தாரின் திருக்குமாரன் காங்கிரசில் புகுந்து, தந்தை பெற முடியாதனவற்றைக்கூடப் பெற்று ஒளியுடன் விளங்குகிறார். இந்த ஒளி மங்கிவிடக்கூடாது என்பதற்காகப் பெரியார், இப்போது இந்த ஒளியைத் தந்துதவும் காங்கிரசை ஆதரிக்கிறார். எட்டும் எட்டும் பதினாறுதான், பத்தும் ஆறும் பதினாறுதான்; கணக்குவகைதான் வேறு, முடிவு ஒன்றுதான்.

பெரிய புள்ளிகளின் கணக்கு எப்போதும் இந்த விதமாகத்தான். சோடையாக இருப்பதில்லை. காங்கிரசை எதிர்த்தனர், சுவையும் பயனும் கிடைக்கும் காலம் வரையில் — வெள்ளைக்காரன் துணை இருக்கும் வரையில். பிறகு, காங்கிரசை ஆதரித்து, சுவையும் பயனும் பெறுகின்றனர்.

அவர்கள் இதைப் பெற இழந்தது என்ன? கிளாஸ்கோ மல்லும், சரிகைத் தொப்பியும்! பெற்றது என்ன? மந்திரி வேலைவரையில்! விவரம் தெரியாதவர்களா! அவர்களுக்கே உரிய கணக்குத் திறமையுடன் காரியமாற்றுபவர்கள் இந்தக் கனதனவான்கள்-நடந்த நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வருகிறது.

ஒரு நண்பர்—குறிப்பிடத்தக்க புள்ளி—பஸ் முதலாளி—பத்து ஆண்டுகளுக்கு முன்பு, கிளாஸ்கோ மல் வேட்டி உடுத்திக்கொண்டு, பாப்ளின் சட்டைபோட்டுக் கொண்டு பட்டைக்கரை சரிகை அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டு, வந்தார்! 'என்னைக்காண. தெருத் திண்ணையில் உட்கார்ந்தோம் பேச.

முனிசிபாலிடி, பஞ்சாயத்து இவற்றின் உறுப்பினர்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற மேல் அவைக்குச் செல்லும் தேர்தலில் தாம் நிற்க விரும்புவதாகச் சொன்னார்; என் உதவி கேட்டார்.

எனக்கு வேண்டியவர்கள் அந்த அமைப்புகளிலே அதிகம் கிடையாது. அவருக்கும் தெரியும். ஆனாலும் தேர்தல் என்றால் எல்லோரையும் பார்க்கவேண்டுமே! அந்த முறைப்படிப் பார்த்தார் என்று எண்ணுகிறேன்.

நான் சொன்னேன் இந்தவிதமான தேர்தலிலே நிறையச் செலவாகிறதாமே என்று.

அவர் பச்சையாகவே பேச ஆரம்பித்தார்.

எனக்கு ஓட்டுப் போடுபவர்கள், கேட்டால் பணம் கூடத்தர நான் தயார் என்றார்.

எவ்வளவு என்று கொடுக்க முடியும். நிறையச் செலவாகுமே; என்றேன்.

உடனே அவர், மளமள வென்று கணக்குப் போட்டுக் காட்டினார்.

இருபதனாயிரம் செலவாகிறது என்றே ஒரு கணக்குக்கு வைத்துக் கொள்ளுவோம். என்ன நஷ்டம் அதனாலே — ஐந்து வருடம் மேல் அவை உறுப்பினராக இருந்தால், மாதம் 150, வருடத்துக்கு 1800, ஐந்து வருடத்துக்கு 9000! இதன்றி படி வேறு இருக்கிறது. இந்த ஐந்து வருஷத்தில் ஒரு பஸ் ரூட்டாவது கிடைக்காதா! எத்தனை மந்திரிகள், அதிகாரிகள் தொடர்பு ஏற்படும்! போதுமே! முன்னாலே போட்டுப் பின்னாலே எடுக்க வேண்டியதுதானே என்றார்.தம்பி! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எனக்கு மட்டுமா, இப்போது உனக்குத் தூக்கிவாரிப் போடப் போகிறது பாரேன்! சொன்னபடியே செய்து காட்டினார் அந்தப் புள்ளி.!!

சொன்னதற்கு மேலும் செய்து காட்டிவிட்டார்! காங்கிரசில் சேர்ந்து தலைவராகிவிட்டார்!

இப்போது அவர் மகாநாட்டுத்திறப்பாளர்,அமைச்சர் பேச்சாளர்! அவர் அழைக்கிறார், அமைச்சர் செல்கிறார்! அவர் கேட்கிறார், அமைச்சர் அக்கறை காட்டுகிறார்! பெரிய காங்கிரஸ் தலைவராகிவிட்டார். முடிந்தது பாரேன்! இவ்வளவு எளிதாக எப்படி ஏற்படமுடிகிறது இந்த உறவு? இதயம் இருக்கட்டும் ஒருபக்கம் என்று இருசாராரும் இருந்து கொள்வதால்.

இப்படிப் பட்டவர்களின் முகாம், இன்றையக் காங்கிரஸ். இவர்களின் துணையுடன் நடத்தப்படும் தேர்தலின் போது, மக்களின் இதயம் நமது பக்கம் ஆகவே வெற்றிநமக்குதான் என்று எண்ணி ஏமாறக்கூடாது. விழிப்புடனிருந்து, தேர்தலின்போது சுறுசுறுப்பாகப் பணியாற்றும் விந்தைமாந்தர்களைக் கவனித்தாகவேண்டும். அவர்களில் சிலரை, அடுத்தகிழமை காட்டுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

# "தமிழன் கால்வாய்"

தனுஷ்கோடியைக் கடல் மூழ் கடித்ததால் "தமிழன் கால்வாய்" எனப்படும் சேதுக் கால்வாய் திட் டத்தை நிறைவேற்ற வேண்டியது அவசரமும் அவசியமும் ஆகிவிட் டது சேதுக் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றினுல் எவ்வளவு நன்மை கிடைக்கும் என்பதைவிளக்குகிறது இக்கட்டுரை.

தனுஷ்கோடியைக் கடல் விழுங் கியதால் ஆயிரக்கணக்கான மக் கள் வீடு வாசல் இழந்து தவிக்கிருர் கள் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க சேதுக் கால்வாய் திட் டத்தை அமுல் நடத்தவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

வாழ்விழந்த மக்களுக்கு வாழ்வு கொடுக்க இத்திட்டம் உதவுவது ஒருபுறம் இருக்க இந்த திட்டத்தின் மூலம் எவ்வளவோ நன்மைகள் கிடைக்கும்.

## திட்டத்தின் கதை

சேதுக் கால்வாய் திட்டம் இன்று நேற்று அல்ல. வெள்ளைக்காரர்கள் காலம் முதலே பரிசிலனையில் இருந்துவரும் திட்டம் ஆகும்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் இருந் தும் பம்பாய், கொச்சி, போன்ற துறைமுகங்களில் இருந்தும் சென்னை கல்கத்தா, விசாகப்பட்டி னம், ரங்கூன் முதலிய துறைமுகங் களுக்கும் போகவேண்டிய கப்பல் கள் இலங்கையைச் சுற்றிக் கொண்டு [தலையைச் சுற்றி மூக் கைத் தொடுவதுபோல்] வரவேண்டி உள்ளதை வெள்ளைக்காரர்கள் உணர்ந்தார்கள்.

## கால்வாய்

எனவே மேற்கு நாடுகளில் இருந்து இந்தியாவில் கிழக்குக் கடற்கரை நகரங்களுக்கு இலங்கை யைச் சுற்ருமல் சுலபமாகக் கப்பல் கள் போய்வர என்ன வழி என்று யோசித்தார்கள்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள கடல் ஆழம் இல் லாமல் இருப்பதால்தான் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக்கொண்டு வரவேண்டியிருக்கிறதென்றும் எனவே ஆழப்படுத்தி கால்வாய் அமைத்தால் இந்த குறை நீங்கும் என்றும் கண்டார்கள்.

## திட்டம்

துறைமுக எஞ்சினியரான பிரிஸ்டோ என்பவர் ஒரு கோடியே 70 லட்சம் செலவில் ஒருதிட்டத்தை தயாரித்து அப்போதைய சென்னை அரசாங்கத்திடம் கொடுத்தார். ஆனுல் அது ஏற்கப்படவில்லை.

பிறகு வேறு சிலர் திட்டங்கள் தயாரித்தார்கள். 1902ம் ஆண்டில் தென்னிந்திய ரெயில்வே வருடத் துக்கு ஏழரை லட்சம் ரூபாய் வரு மானம் கிடைக்குமென்று ரெயில்வே நிர்வாகம் திட்டம் தயாரித்தது.

ஆனுல் அந்த திட்டத்தை நிறை வேற்றுவதற்கான மேல்நடவடிக் கைகள் எடுத்துக் கொள்ளப்பட வில்லை.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு மீண்டும் சேதுக் கால்வாய்த் திட்டம் அரசாங்கத்தின் தீவிர பரி சீலனைக்கு வந்தது.

நீண்ட ஆராய்ச்சிக்குப் பின் 21-கோடி ரூபாய் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்த திட்டம் டெல்லி சர்க்காரிடம் தாக்கல் செய் யப்பட்டது.

இந்த திட்டப்படி 450 அடி நீளம், 150 அடி அகலம். 36 அடி ஆழ முள்ள கால்வாய் வெட்டி அதில் கப்பல் போக்குவரத்து நடைபெறும்.

## திட்டத்தின் நன்மைகள்

சேதுக் கால்வாய் திட்டத்தினுல் பல நன்மைகள் ஏற்படும்.

கன்னியாகுமரியிலிருந்து ஒரு கப் பல் சென்னைக்கு வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். தற்போது அந்தக் கப்பல் சென்னைக்கு வருவ தென்ருல் அது இலங்கையைச் சுற்றிக்கொண்டு வரவேண்டும். கால்வாய் அமைக்கப்பட்டுவிட்டால் 368 மைல் மிச்சமாகும்.

இதேபோல் விசாகப்பட்டினத் துக்கு 304 மைல்களும், கல்கத்தா வுக்கு 265 மைல்களும் மிச்சமாகும்.

## தூத்துக்குடி

சேதுக் கால்வாய் அமைக்கப் பட்டுவிட்டால் தூத்துக்குடிக்கும் சென்னைக்கும் இடையில் உள்ள தூரம் 316 மைல்களாக இருக்கும். தற்போது தூத்துக்குடியில் இருந்து ஒரு கப்பல் சென்னைக்கு வருவது என்ருல் மொத்தம் 750 மைல் சுற்ற வேண்டி உள்ளது.

அதாவது பழைய தூரத்தில் 58 சதவிகிதம் குறைந்துவிடும்.

இதேபோல் கொச்சியில் இருந்து சென்னைக்கு வரவேண்டிய கப்ப லின் தூரத்தில் 44 சதவிகிதமும், தூத்துக்குடியில் இருந்து கல்கத்தா வரவேண்டிய தூரத்தில் 26 சதவிகி தமும், பம்பாயில் இருந்து கல்கத்தா வரவேண்டிய தூரத்தில் 16 சதவிகி தமும் மிச்சமாகும்.

## நேரம் மிச்சம்

இது மட்டும் அல்ல. இலங் கையை சுற்றுவதால் கப்பல்கள் கூடுதலாக ஒன்றரை நாள் பிரயா ணம் செய்யவேண்டி உள்ளது.

இந்த ஒன்றரைநாளுக்கும் கப்பல் செலவு ரூபா ஏழாயிரமாகும்.

சேதுக் கால்வாய் அமைத்தால் இந்தப் பணம் மிச்சப்படும் விரை வாகவும் கப்பல் போய்வரும்.

## துறைமுக வளர்ச்சி

மேலும் இந்தக் கால்வாய் திட்டத் தினுல் தூத்துக்குடி துறைமுகம் வளர்ச்சியடையும். அங்கு ஏற்றுமதி இறக்குமதி அதிகமாகும்.

அத்துடன் நமது கப்பல்கள் வெளிநாட்டு நீர்பரப்பில் செல்லாமல் இந்திய நீர்பரப்பில் சென்றுவர வழி ஏற்படும்.

O

# பசித்த வயிறும் பளிங்கு மாளிகையும்

உற்பத்தி பெருகிற்று! தொழில் வளர்ந்தது! புதிய பாதைகள்! புதுப் புது வாய்க்கால்கள்! புதுப் புது வணிகக் கோட்டங்கள்! செல்வமும் சீரும் பெருகிடச் செய்யும் சாதனங்கள்! இந்தியாவுடன் வாணிபம் நடாத்திப் பொருள் ஈட்டுவதற்கான புதிய அமைப்பு! இந்த நிலை காணப்பட்டது! எண்ண எண்ண இனிப்பளிக்கும் நிலைமை வடிவமெடுத்தது.

மேற்கிந்தியப் பகுதிகளில் ஐந்தாறு தீவுகள் சொந்தமாக்கப்பட்டன. ஆப்பிரிக்காவிலும் ஆதிக்க புரிகள் அமைக்கப்பட்டன. அமெரிக்காவில் கனடா பகுதியில் செல்வாக்கு ஏற்பட்டது!

பொறியியல் நிபுணர்கள் காட்டாறுகளைக் கட்டுப்படுத்தினர்; கோட்டை கொத்தளங்கள் அமைத்துத் தந்தனர். கலே, டன்கர்க், பிரெஸ்ட் போன்ற பல இடங்களில் அரண்கள் அமைக்கப்பட்டன.

வல்லமை மிக்கதோர் கடற்படையும் அமைக்கப்பட்டது. வேறு எந்த நாட்டுக கடற்படைக்கும் இப்படை குறைவானதல்ல என்று கூறிடத் தக்க தரமுள்ள கப்பற் படை!

காவியமும் ஓவியமும் கருத்துக்கு விருந்தளித்தன! பல நகர்களில் அறிவாலயங்கள், கலா மண்டபங்கள், ஓவியக் கூடங்கள்! சிற்பக் கூடங்கள்!

மாலியர், ராசின், பாய்லோ போன்ற இலக்கிய வித்தகர்கள் இறவாப் புகழ் கொண்ட இலக்கியப் படைப்புகளை ஆக்கித் தந்தனர்.

ஐரோப்பிய நாடுகள் யாவும் கொலுமண்டபத்துக் கோலாகலம் கண்டு வியந்து நின்றன.

பெருஞ்செலவிட்டு மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் எழுப்பப்பட்டன, எழில் மிகுந்து காணப்பட்டது! எங்கும் சுறுசுறுப்பு, பரபரப்பு, மினுமினுப்பு!

மன்னன், கவிஞர்களையும் கலைஞர்களையும் போற்றிவந்தான்; ஆதரவளித்து வந்தான்.

டெஸ்கார்டிஸ், பாஸ்கல் போன்றோர் தத்துவ நூற்களை இயற்றித் தந்தனர். வரலாற்றுச்சுவடிகள், வண்ண மிகு கவிதைகள், கற்பனைக் கதைகள், காலத்தை வெல்லும் விதத்தன, தோன்றியபடி இருந்தன. பேருரையாற்றிடும் கலை வளர்ந்தது. எந்தத் துறையிலே பார்த்தாலும் ஓர் எழில், ஏற்றம்! நாடு புதுக் கோலம் பூண்டுவிட்டது, நானிலம் மெச்சிடும் நிலை பெற்றுவிட்டது,

கலை மணம் கமழும் பூங்காவாய், செல்வம் கொழித்திடும் திருநாடாய், பிரான்சு நாட்டைப் புதுப்பித்துவிட்டான், பெருமை மிக்க மாமன்னன் பதினாலாம் லூயி என்று பாராட்டாதார் இல்லை

இது நல்லரசு, நாட்டுக்குப் பெரும் புகழ் ஈட்டித் தந்த அரசு, செல்வம் வளர்ந்திட வழி கண்ட அரசு என்று வாழ்த்தினர்.

பதினாலாம் லூயி மன்னன் பிரான்சுக்குப் புத்துயிரளித்தான் என்று பாராட்டினர்.

ஆனால்; புத்துயிர் அளித்தவன் என்று புகழப்பட்ட பதினாலாம் லூயி மன்னன் காலத்திலேதான், பிரான்சு நாட்டிலே புரட்சி வெடித்திடுவதற்கான வெடிமருந்து தூவப்பட்டது என்பதனைப் பிறகே உணர முடிந்தது.

பிரான்சு நாட்டின் புகழ் பரப்பிட, புதுக்கோலம் சமைத்திட மன்னன் மேற்கொண்ட முயற்சிகள் ஒவ்வொன்றுக்கும் பெரும் பொருள் தேவைப்பட்டது; பெற்றான்; செலவிட்டான்; ஒளி கூட்டினான்; வண்ணம் காட்டினான்!

பொருள் எங்கிருந்து பெற்றான் பேரரசன்? மக்களிடமிருந்து! தாங்க முடியாத அளவு வரிகளைப் போட்டு!

புதுக்கோலத்துடன் பிரான்சுநாடு நிமிர்ந்து நின்றது, ஆனால் அந்தக் கோலம் நாடு பெற்றிட மக்கள் வரி கொடுத்துக் கொடுத்து வளைந்து போய்விட்டனர்.

நாடு புத்தொளி பெற்றிட மக்கள் தமது வாழ்வை இருள் நிரம்பிய தாக்கிக் கொண்டனர்.

பட்டாடை பெற்றணிந்து பகட்டாக வாழ்ந்து காட்ட எண்ணியவன், வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பணத்தை மிச்சம் பிடித்து, பகட்டுடை வாங்கிடச் சென்றகாலை பசியாலும் பட்டினியாலும் தாக்கப்பட்டுக் கிடந்ததால், பாதையிலே சுருண்டு வீழ்ந்து மடிந்து போனது போல. நாட்டிலே நானாவிதமான எழிலமைப்புகள், ஏற்றம் காட்டும் அமைப்புகளை ஏற்படுத்துவதற்காகச் செலவிடப்பட்ட பெருந்தொகையைத் தந்த ஏழையர், பெரும் பாரத்தைத் தாங்கித் தாங்கி அதனாலேயே நசுங்கிப் போயினர்.

நாட்டின் வீரத்தை மற்றவர் அறிந்து, ஒப்புக்கொண்டு, புகழாரம் சூட்டவேண்டும் என்பதற்காக, காரணமற்ற கடும்போர்களை நடத்த நேரிட்டது. பொருள் பாழாயிற்று, புகழொளி காண்பதற்கு.

இவை காரணமாகப் பெருஞ் சுமையை மக்கள் தாங்கிட வேண்டி வந்தது; வறுமை நெளிந்தது; மக்கள் மனதிலே கவலை குடைந்தது. நாடு பன்னீரில் மூழ்கி மணம் பெற்

றிட, மக்கள் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்திட வேண்டிவந்தது.

ஏழை ஏக்கமுற்ருன்; அவனுடைய பஞ்சடைந்த கண்கள் பொறிகளைக் கக்கின; புரட்சித் தீ மூண்டது; பிரபுக்களின் கோலாகலம் அந்தத் தீயினுல் சுட்டெரிக்கப்பட்டது.

எழிலளிக்கிருன் மன்னன் என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தனர்; ஆனுல் அவனுடைய செயல்கள், புரட்சிக்கு விடும் அழைப்பாக மாறிவிடும் என்பதனை உணரவில்லை.

பதினுலாம் லூயி மன்னன் நாடு பகட்டான வடிவம் பெற மேற்கொண்ட முயற்சியே, நாட்டிலே புரட்சியை மூட்டிவிட வழி வகுத்துத் தந்தது.

பதினுலாம் லூயி மன்னன் தன்னையும் அறியாமல். பிரன்ச்சுப் புரட்சிக்கு வித்திட்டான்; விளைந்ததை அறுத்தெடுத்திட அவன் இல்லை; பிறகுவந்தவன், இவைகளுக்குப் பதிலளிக்க வேண்டியவனுனன்!

பதினுலாம் லூயி பளிங்கு மாளிகை கட்டிக் காட்டினுன்; அவனுக்குப் பிறகு அரியணை ஏறியவனிடம் மக்கள் தமது பசித்த வயிற்றினைக் காட்டினர்.

புரட்சிக்குக் காரணம் மக்கள்மீது வீழ்ந்த பெருஞ்சுமை; அந்தப் பெருஞ்சுமைக்குக் காரணம் நாட்டுக்குப் புதுக் கோலம் தந்திட மன்னன் மேற்கொண்ட முயற்சிகள்! புரட்சிக்கு வித்திட்டுக் கொண்டிருக்கிருன் பதினுலாம் லூயி என்று எவரும் கருதிட முடியாதபடித்தான் எக்களிப்புஇருந்துவந்தது. பிறகோ? நாம் சுரண்டப்படுகிருேம், சொகுசான வாழ்விலே சுயநலமிகள் நீந்திக் களித்திட! என்ற எண்ணம் ஏழையரிடம் எழுந்தது; புரட்சி வெடித்தது!

ஏழை, சீறிப் போரிடக் கிளம்பியதற்கு, மறைமுகமான, காரணமாக இருந்தவர் பதினுலாம் லூயி மன்னனே!

பிரான்சிலே நேரிட்டுவிட்ட இந்த நிலை, மறுக்கொணுத ஓர் பாடத்தை எவருக்கும் தரவல்லது.

பளபளப்பும் பகட்டும் காட்டிடப் பணம் செலவிடுவது, எதிர்கால ஆபத்துக்கு அச்சாரம் அளித்திடுவதாக அமைந்துவிடும் என்பது பாடம்.

தொழில் வளர்ந்திருக்கலாம், கலைமணம் பரப்பிடலாம், எழில் தழைக்கலாம். ஆனுல் இவைகளுக்காகச் செலவிடப்படும் தொகையின் சுமை, மக்கள் வாழ்க்கையை வளைத்துவிடக்கூடிய அளவினதாகி விடக்கூடாது.

மக்களைக் கசக்கிப் பிழிந்து பொருள்பெற்று, நாட்டுக்குப் புதுக் கோலம் புனைந்திடுவது, கண்ணை விற்று சித்திரம் வாங்குவதுபோன்றதாகும்.

பசித்த வயற்றுடன் போராடிக் கொண்டிருக்கும் மக்களை, பளிங்கு மாளிகையைக்காட்டி மகிழ்ச்சி கொண்டிடச் செய்திட முடியாது. சோற்றுக்கும் பணம் மிச்சப்படுத்தி வைக்காமல் அத்தனைப் பணத்தையும் சந்தனக் குழம்புபெறச் செல விட்டுவிடுவது பேதமை!

புதுப்புதுக் கட்டடங்கள் எழுப்பப் படலாம், கண்டோர் வியப்படையும் விதத்தில்; ஆனுல், இதற்காகும் செலவு ஏழையரிடமிருந்து பெற்றிட்டால் குடில்களில் குமுறல் எழும், ஏழை சீறிஎழுவான்; புரட்சி வெடித்துக்கொண்டு கிளம்பும்.

பதினுலாம் லூயி மன்னன், தன் காலத்திலேயே நாட்டுக்கு எல்லா ஏற்றமும் எழிலும், கோட்டைக் கொத்தளமும் கொலு மண்டபங்களும், படைவரிசைகளும் பகட்டுகளும் ஏற்பட்டாகவேண்டுமென்று துடித்து, நின்ருன்; அதனுடைய விளைவு பிறகு, பிரான்சு நாட்டிலே வெட்டுப்பாறையாகக் காட்சி தந்தது.

கொலு மண்டபத்துக் கோலாகலத்தைக் கொண்டல்ல ஒரு நாட்டின் நிலையை மதிப்பிட வேண்டியது. குடில்களில் உள்ளவர்களின் வாழ்வு எப்படி இருக்கிறது, வளைந்து இருக்கிறதா மகிழ்ச்சிதருவதாக இருக்கிறதா என்பதுதான் சரியான அளவு கோல்.

நாட்டைப் புதுப்பிக்க வேண்டும், புத்தெழில் காணவேண்டும் போற்றத்தக்க ஏற்றம் பெறவேண்டும் என்ற எண்ணம் ஆட்சியினருக்குத் தோன்றும்போதெல்லாம்,பதினுலாம் லூயி மன்னன் காலத்துக் கோலமும் பிறகு கிளம்பிய புரட்சித்தீயின் வேகமும் விபரீதமும் நினைவிற்கு வரவேண்டும்.

ஆற்று நீரில் குளித்துக் களித்திட விருப்பம் எழுவது இயற்கை! ஆனுல் அதற்காக ஆற்றின் போக்கையே மாற்றி அது தனது இல்லத்திற்குள் வந்திட வழி காண்பவன், குளித்திட முடியாது, வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுவான்!

மன்னன் யானைமீது அம்பாரி அமைத்து அதில் அமர்ந்து பவனி வருவதற்காக, பெருந்தொகையை ஏழையிடம் சுரண்டி அரசு பெற்றுக்கொள்ளுமானுல், ஏழையின் அடுப்படியில் பூனை உறங்கும், ஏழை, புலியாவான்!

பிரான்சு தந்திடும் இந்தப் 'பாடம்' எந்தக் காலத்துக்கும் பொருத்தமானது; எவரும் புறக்கணிக்க ஒண்ணுதது.

★

தாயின் தியாகம் மிகப் பெரியது!
குழந்தைக்காக தன் கண்ணை விளக்காக்குகிருள்!
கையைத் தொட்டிலாக்குகிருள்!
ரத்தத்தைப் பாலாக்குகிருள்!
ஆனுல் இதில் வரும் தாய் இவைகளைவிட மிகச் சிறந்த ஒரு தியாகத்தைச் செய்கிருள்...............!

"தும்பைப் பூ"

தென்னரசு

எழுதும்

தொடர் கதை விரைவில் ஆரம்பமாகிறது.

"காஞ்சி"யில்

4-ம் பக்கத் தொடர்ச்சி

(7) அண்ணாத்துரை இந்தி படித்துப் பட்டம் பெற்றிருக்கிறாராமே! தெரியுமா?

ஆறடி உயரமுள்ள பக்தவத்சலனார் காமராஜரின் மூன்றுவது மகனுக்கு கோழிக்கறி பிரியாணி வாங்கிக் கொடுக்க, அதைத் தின்னமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தபோது, வெள்ளைக் காக்கை ஒன்று வர அதைக் கண்டு சிறுவன் சிரித்திட அது தான்சமயமென்று பிரியாணியை எடுத்து சிறுவனுடைய காதிலே ஊட்டிவிட்டார்—அது தெரியுமா!

(8) ஷேக்அப்துல்லா விஷயமாக இப்போது இந்தியப் பேரரசு எடுத்திருக்கும் நடவடிக்கைபற்றி என்ன எண்ணுகிறீர்?

தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்திழுக்கும் கதை ஞாபகத்திற்கு வருகிறது.

(9) காங்கிரஸ்காரர், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தவர், காங்கிரசின் ஆதரவாளர் இம் மூன்று வகையினருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பூச்செடி, பூங்கொத்து, காகிதப்பூ! இவைகளுக்கு உள்ள வித்தியாசந்தான்!

(10) தேர்தலில் தோற்றுப்போன கேரளத்து முன்னாள் முதலமைச்சர் சங்கர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

காமராஜர் கையாண்ட தேர்தல் முறையினாலேயே தாம் தோற்றுவிட்டதாக எண்ணிக் கொண்டு மனக்கசப்பு அடைந்திருக்கிறாராம். தேசீயம் ஆதாயம் தரவில்லை என்பதால் இப்போது ஈழவர் வகுப்புக்கான அமைப்பிலே மும்முரமாகப் பணியாற்றத் தொடங்கிவிட்டாராம்.

(11) திருமதி பண்டாரநாயகா இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

சேனநாயகா ஆட்சி தமிழர்களைத் தட்டிக் கொடுக்கிறது என்று பிரசாரம் செய்து சிங்கள வெறியை மூட்டிவிடும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறாராம்!

(12) முன்பு திருமதி பண்டாரநாயகாவுக்கு மாம்பழம் அனுப்பிற்றே இந்திய சர்க்கார், இப்போது என்ன பழம் அனுப்புவார்கள்?

பதவிப் பழம் கிடைக்காமல் பசித்துக் கிடக்கும் அம்மையாருக்கு இப்போது எந்தப் பழம் அனுப்பினாலும் இனிக்காதே!

(13) உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் இதுவரை எவ்வளவு ஏக்கர் நிலம் பெரிய புள்ளிகளிடமிருந்து கிடைத்திருக்கிறது?

ஒரு ஏக்கர் நிலம்கூட இல்லை! சர்க்காரே தெரிவித்திருக்கிறது!

# ஜப்பானியர்களின் அரிய நேர்மை!

பத்திரமாக வீட்டுக்குப் பணம் போய்ச் சேரவேண்டுமா? பைநிறையப் பணம் வைத்து அதை ஓடிக்கொண்டிருக்கும் டாக்ஸியிலிருந்தவாறு வெளியே வீசி எறியுங்கள்! நீங்கள் வீட்டுக்குப் போவதற்குமுன் உங்கள் பணம் வீட்டில் தயாராகக் காத்திருக்கும்!

பையில் பெயரும் முகவரியும் இல்லாவிடில் உங்கள் கைக்குப் பணம் கிடைக்கச் சிலகாலம் பிடிக்கத்தான் செய்யும்!

இப்படித்தான் வெகுநாட்களாகத் தோக்கியோ வாசிகள் கூறி வருகிறார்கள்!

இத்தகவல் முற்றிலும் உண்மை தான் என்று ஒலிம்பிக் விளையாட்டுகளைக் காணவரும் விருந்தினர்களும் கூறுகிறார்கள்.

ஜப்பானின் நேர்மை நல்லதோர் கொள்கையாக இருப்பதோடு நாட்டின் மதக்கோட்பாடாகவும் நிலவி வருவதாகத் தோன்றுகிறது.

இதை விளக்க ஓரேவிதமான மூன்று கதைகளைக் கேட்போம்.

முதலாவது ஒரு ஒலிம்பிக் விளையாட்டாளரைப் பற்றியது. அவரே நடந்ததைக் கூறினார்.

விலையுயர்ந்த முத்தாரத்தைத் தமது காதலிக்கென்று வாங்கிய அவர், அதை மறதியாக டாக்ஸியில் வைத்துவிட்டார். ஒலிம்பிக் கிராமத்தில் அவருக்காக வாசற்படியில் டாக்ஸியோட்டி காத்திருந்தார். அவர் தன் கையில் முத்துமாலையுடன், அங்கு வரும் விளையாட்டுக்காரர்களை எல்லாம் உற்றுநோக்கியவாறு மாலைக்கு உரியவரைத் தேடினார்.

முத்துமாலையை உரியவரிடம் சேர்த்த டாக்ஸியோட்டி சன்மானம் பெற்றுக்கொள்ளக்கூட மறுத்து விட்டார்!

ஒலிம்பிக் விளையாட்டுகளைக் காணவந்திருந்த ஒரு பெண்மணி தம் சட்டையைச் சரி செய்வதற்காக ஹோட்டலிலிருந்த ஜப்பானியத் தையற்காரப் பெண்ணிடம் கொடுத்திருந்தார். அதற்கான கூலி 25 காசுதான். ஆனால் தவறுதலாக அவர் 50 காசு கொடுத்து விட்டார்.

நெடுநேரம் நீந்தி விளையாடி விட்டு, அறைக்குத் திரும்பியபோது ஜப்பானியப் பெண்மணி பாக்கிக் காசு கொடுப்பதற்கெனதமக்காகக் காத்திருந்ததை அவர் கண்டார்! பாவம்! இதற்காக ஹோட்டலில் நாளெல்லாம் காத்திருந்த ஜப்பானியப் பெண்மணியைப் பாராட்டாமலிருக்கத்தான் முடியுமா?

ஒரு அதிகாரி நன்றாகக் குடித்துவிட்டு உல்லாசமாக மாலை நேரத்தை நன்றாகக் கழித்து விட்டுப் பர்சையும் தொலைத்து விட்டார். நூற்றுக்கணக்கான வெள்ளியும் டிக்கெட்டுகளும் வேலை சம்பந்தமான பேட்ஜுகளும் அதில் இருந்தன. அதிகாரிக்குத் தொலைத்த பர்சை எங்கேயிருந்து தேடுவதென்பது தெரியவில்லை.

நாட்கள் இரண்டு சென்றன! மதுபானக் கடையிலிருந்த ஒருவரின் தாய் டிக்கெட்டுகள் பணம் எல்லாவற்றையும் குறையாமல் அப்படியேகொண்டுவந்து அதிகாரியிடம் சேர்ப்பித்தார்.

தாயும் மகனுமாக இரண்டு நாட்கள் தூதரக வாயிலாக அதிகாரியைத் தேடி இருந்திருக்கிறார்கள், இரண்டு நாட்கள் தாமதமானதற்கு அவர்கள் வருத்தமும் தெரிவித்தார்களாம்!!

✱

# திரட்டு

## தூக்கம்

தூக்கம்பற்றி ஆராய்ந்து வரும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள விஷயங்கள், இதுவரை இருந்து வந்துள்ள நம்பிக்கைகளைத் தகர்ப்பவையாக உள்ளன.

ஒருவர் முழு ஆரோக்கியத்துடனும் வேலைத் திறமையுடனும் இருக்க இரவில் குறைந்தது 8மணி நேரமாவது தூங்கியாக வேண்டும் என்று ஒரு சமயம் கருதப்பட்டு வந்தது. உண்மையில் வயதடைந்தவர்களில் பெரும்பாலோர் இதைவிடக் குறைவான தூக்கத்துடன் வாழமுடியும் என்று ஆராச்சிகளிலிருந்து கருதத்தோன்றுகிறது.

ஒருவர் 2 நாள் தூங்காமலிருந்தாலும் அதன் விளைவாக அவருடைய வேலைத்திறமை குறைவதில்லை என்று கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் ஒரு குழுவினர் பலரை வைத்து நடத்திய பரிசோதனை மூலம் கண்டுபிடித்துள்ளனர். அவ்விதமான நிலையில் ஒருவருடைய வேலைத் திறமை உண்மையில் அவர் எந்த வேலையைச் செய்கிறார் என்பதைப் பொறுத்ததாகவே உள்ளது.

ஆராய்ச்சிக் குழுவினர், பரிசோதனைகளுக்கு உட்படமுன் வந்த தொண்டர் கோஷ்டியினரை தூக்கமின்றி சுமார் 60 மணி நேரம் விழித்திருக்க செய்தனர் அப்போது அவர்கள் பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு, அவர்களுடைய வேலைத திறமை பரிசோதிக்கப்பட்டது. அதே சமயத்தில் சாதாரண அளவுக்குத் தூங்க அனுமதிக்கப்பட்ட மற்றொரு கோஷ்டியினரும் அதே போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுடைய வேலைத் திறமையும் பரிசோதிக்கப்பட்டது. தூக்கமற்றதொண்டர்கள் சலிப்பூட்டுகிற அல்லது அக்கறை எழுப்பாத ஒரே மாதரியான வேலையில் ஈடுபட்டபோது அவர்களுடைய வேலைத் திறமை மிக விரைவில் குறைந்து போவதாகத் தெரியவந்து அதற்கு மாறாக அவர்களுக்கு அக்கறையூட்டக்கூடிய, அல்லது மிகக் கடுமையான வேலையை அளித்த போது தூக்கமற்றவர்கள் வேலைத் திறமை குன்றாமல் வேலை செய்தது தெரியவந்தது.

சொல்லப்போனால் ஒரு போட்டி 'விளையாட்டுப்'' பரிசோதனையில் 30-மணி நேரம் தூங்காதவர்கள் சாதாரணமாகத் தூங்கியவர்களை விட அதிகத் திறமை கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

✲

## டால்பின்கள் பேசுகின்றனவா?

இன்னும் 20 ஆண்டுகளில் நாம் இதர உயிரினங்களுடன் பேச முடியும் என்று நம்பப்படுகிறது. கடல்களில் வாழும் டால்பின்கள்தான் நாம் பேசப் போகும் முதலாவது உயிரினங்களாக இருக்கும். மனித குலத்தோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும். மீன் பிடிப்பதற்கான சிறந்த இடங்களுக்கு இவை நம்மை அழைத்துச் செல்லும். கடலின் அடி மட்டத்திலிருந்து மணல் தூள்களைக் கொண்டு வந்து கொடுக்கும். கடலில் விழுந்துவிட்ட ராக்கெட்டுக் கூடுகளை எடுத்துவந்து கொடுக்கும்.

விஞ்ஞானப் புதினம் எழுதுவோரின் கற்பனை அல்ல இது. டால்பின்களுடைய நரம்பு அமைப்பு மிகப் பெரும் அளவிற்கு மனித மூளையை ஒத்துள்ளது. மனிதக் குரங்கைவிட இவை நமக்கு மிகவும் நெருங்கியவை என்பதாக சிலவிஞ்ஞானிகள் கருதுகின்றனர் அண்மை ஆண்டுகளில் பல துறைகளை சேர்ந்த விஞ்ஞானிகளும் டால்பின்களில் கருத்துச் செலுதத் தொடங்கி உள்ளனர். நீரின் உராய்வு அழுத்தத்தை அநேகமாக நீக்கிவிடும் தன்மையுடைய டால்பினது தோலைபபற்றிக் கப்பல் திட்டம் புனை நிபுணர்கள் ஆராயந்து வருகிறார்கள்.

அடிநது மூடப்படும் கதவு எழுப்பும் சப்தத்தைப் போன்றுள்ள ஒலியை இந்த டால்பின் உண்டாக்குவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர் இந்த ஒலியைக் கொண்டு கலங்கிய நீரிலும், கதிரவன் ஒளி புக முடியாத ஆழ் மட்டங்களிலும் மீன்கள் இருக்கும் இடங்களைத் தெரிந்துகொள்கின்றன.

கடலில் திமிங்கிலம் 1,500–2,000 மீட்டர் ஆழத்தில் இரண்டு மணி நேரம் வரை தங்கியிருக்கிறது. தனி வகைக் கருவிகளின் உதவியின்றி மனிதனால் சில டஜன் மீட்டர் ஆழத்திறகுமேல் போகமுடியாது இந்தக் கடுமையான அழுத்தத்தைத் திமிங்கிலங்களால் எப்படித் தாங்க முடிகிறது? இவ்வளவு நேரம் எப்படி அவற்றால் மூச்சு விடாமல் இருக்க முடிகிறது? நீரில் ஆழ் மட்டங்களுக்கு மூழ்குவதற்கான எளிய சாதனங்களை அமைக்க இவை பற்றிய ஆராய்ச்சிகள் உபயோகமாயிருக்கும்.

கடலில் செல்லும் சரக்குக் கப்பல்கள் திமிங்கில உடலைப் போல மழுமழுப்பாயிருந்தால் கப்பலின் வேகத்தை அதிகரிக்கச் செய்து விடலாம் என்பதை சோதனைகள் தெளிவுபடுத்தியுள்ளன.

✲

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.